காலை முரசு

பக்கங்கள் 19

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 20 வியாழக்கிழமை 03.04.2025 | அதிர்வு 241

## தேர்தல் ஆணைக்குழுவில்
# அநுரவுக்கு எதிராக நேற்று முறைப்பாடு



"தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களைத் தவிர்த்து ஏனைய வேட்பாளர்களை எவ்விதமான

04 ▶

# மோடியுடன் பேசும் விடயங்கள் குறித்து முதலில் தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் பேச வேண்டும்!

## இலங்கைத் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பின் ராஜ் சிவநாதன் வலியுறுத்து



"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து பிற கட்சிகளின் அனைத்துப் பங்கேற்பாளர்களுடனும் முன் கூட்டியே பேசிப் பகிர்ந்து கொள்வதை உறுதி செய்யுங்கள். தமிழ்க் கட்சித் தலைவர்களின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை விட, நமது சமூகத்தின் பரந்த நலன்களில் கவனம் செலுத்துவதை நாம் உறுதி செய்ய வேண்டும்."

– இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார் இலங்கை வாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பைச் சேர்ந்த ராஜ் சிவநாதன்.

04 ▶

## இலங்கைக்குள் அத்துமீறியமையினால் அரசுடைமையாக்கப்பட்ட
# இந்திய மீனவர்களின் 74 படகுகளை நடுக்கடலில் மூழ்கடிக்க அரசு முடிவு

## மோடி வந்து போனதும் முன்னெடுக்கப்படுமாம்

(ந.லோகதயாளன்)

**இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் கடற்படையினரால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களின் மொத்தம் 74 படகுகளை நடுக்கடலில் மூழ்கடிக்க இலங்கைக் கடற்றொழில் திணைக்களத்தால் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.**

04 ▶





# நால்வர் மீதான பிரிட்டனின் தடை பற்றி ஆராய மூவர் கொண்ட குழு நியமனம்!

ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட மூன்று முன்னாள் படைத் தளபதிகள் மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) ஆகிய 4 இலங்கையர்களுக்கு பிரித்தானியா விதித்துள்ள தடை தொடர்பாக ஆய்வு செய்து பரிந்துரைகளை

04 ▶




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள்கள் விஜயமாகநாளை மாலை கொழும்பு வருகிறார்.

அவரது நிகழ்ச்சி நிரல் பற்றிய முழு விவரங்களும் இன்னமும் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

அவர் திருக்கோணேஸ்வரம் கோவிலுக்கு தரிசனத்துக்கு செல்வார், சம்பூரில் சூரிய மின்சக்தி திட்டத்தை ஆரம்பித்து வைப்பார் என்பவை பற்றி எல்லாம் பல பேச்சுக்கள் அடிபட்டன. ஆனாலும் அவர் திருகோணமலைக்கு இம்முறை செல்வாரா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. பாதுகாப்புக் காரணங்கள் கருதி திருகோணமலை விஜயத்தை அவர் தவிர்க்கக் கூடும் என்று ஒரு பேச்சு அடிபடுகின்றது.

கொழும்பு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுடன் அவர் அநுராதபுரத்துக்குச் செல்கின்றார் என்று தெரிகிறது.

அநுராதபுரம் விஜயத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து நேரடியாக ஹெலிக்கொப்டரில் அவர் இராமேஸ்வரம் மண்டபம் பகுதிக்குச் செல்வார் என்றும் கூறப்பட்டது.

திருகோணமலைக்கான

03 ▶



# வட மாகாணத்தில் சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்காக அனுமதி கோரும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## யுனிசெப் பிரதிநிதிகளிடம் ஆளுநர் சுட்டிக்காட்டு

வறுமை, பெற்றோர் மறுமணம் ஆகியவற்றால் சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்காக அனுமதி கோரும் சிறுவர்களின் எண்ணிக்கை வடக்கில் அதிகரித்துச் செல்வதாகவும், இது புதியதொரு சவாலாக மாறியுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் யுனிசெப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து கள நிலைமைகளை ஆய்வு செய்யும் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது ஆளுநரிடம், யுனிசெப் அமைப்பு முன்னெடுத்துள்ள திட்டங்கள் தொடர்பாகவும் தமது கள நிலைமை ஆய்வு தொடர்பாகவும் அவர்கள் விளக்கமளித்தனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

“1991ஆம் ஆண்டு உதவி அரச அதிபராக தான் பதவியேற்ற காலத்திலிருந்து யுனிசெப் அமைப்பு பல்வேறு வகையான உதவிகளை எமது மக்களுக்குச் செய்து வருகின்றது. அதற்கான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வடக்கில் சிறுவர் துஷ்பிரயோகம், இளவயது கர்ப்பம் என்பன முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளன.

மேலும், வடக்கு மாகாணம் தற்போது புதிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. சிறுவர் இல்லங்களுக்குச் சிறுவர்களைச் சேர்க்கும் போக்கு அதிகரித்துச் செல்கின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பால் ஏற்பட்ட வறுமை நிலைமை ஒரு காரணமாக உள்ளபோதும், பெற்றோர் மறுமணம் செய்வதால்தான் பெரியளவு பாதிப்பு ஏற்படுகின்றது. சிறுவர் இல்லங்களில் சிறுவர்களை இணைப்பதை ஊக்குவிக்க வேண்டாம் என அரசு அறிவுறுத்தியுள்ளது. ஆனால் சிறுவர் இல்லங்களை நோக்கி வருபவர்களை இணைக்காமல் விட்டாலும், பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, இது எமக்குச் சிக்கலான நிலைமையாக உள்ளது.” – என்று ஆளுநர் சுட்டிக்காட்டிக்காட்டினார்.

இதேவேளை, மனநல பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கான, தங்க வைப்பதற்கான அரச இல்லங்கள் இல்லை என்று வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் யுனிசெப்பின் சிறுவர் பாதுகாப்பு தலைமை அதிகாரி ரியோனா அஸ்லான்சிவிலுடன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளும் பங்கேற்றனர்.





# மோடியின் வருகையை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையை முன்னிட்டு கொழும்பு மற்றும் பல பகுதிகளில் விசேட போக்குவரத்து மற்றும் விசேட பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதனைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாளை 4 ஆம் திகதி மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக



நெடுஞ்சாலை மற்றும் பேஸ்லைன் வீதிகள் மூடப்படவுள்ளன.

இந்த வீதிகள் மூடப்படுவதைக் கருத்தில்கொண்டு பொதுமக்கள் தங்கள் பயண ஏற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

மேலும், நாளைமறுதினம் 5 ஆம் திகதி, கொழும்பின் காலிமுகத்திடல் பகுதி, சுதந்திர சதுக்கத்தைச் சுற்றியுள்ள பகுதி மற்றும் பத்தரமுல்லை அபேகம வளாக வீதிகள் மூடப்படவுள்ளன.

இந்த விசேட போக்குவரத்துத் திட்டத்துக்கு அனைத்து வாகன ஓட்டுநர்களும் பொதுமக்களும் ஒத்துழைக்குமாறு இலங்கை பொலிஸ் கேட்டுக்கொள்கின்றது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் மாநாடு இன்று கொழும்பு ஹைட் பார்க்கில்

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு-2025 ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் இன்று ஏப்ரல் 03 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணி முதல் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

“தொலைதூரம் காண்போம்-அணி திரள்வோம் -எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்” எனும் தொனிப்பொருள் இடம்பெறும் இம்மாநாட்டில் நடப்பாண்டுக்கான கட்சியின் பிரதான பதவி நிலைகளுக்கான அலுவலர்கள் குழாம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளது.

அதேபோல் 2025 ஆம் ஆண்டுக்கான கட்சியின் செயற்குழுவிற்கான பெயர்களும் அறிவிக்கப்படவுள்ளன.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அவரது விஜயம் தவிர்க்கப்படுமானால் பல தரப்புகளின் எதிர்பார்ப்பும் வீணாகிவிடும் என்று கருதப்படுகிறது.

* * *

ஒருவரின் பிறப்பின் போது வைத்தியசாலையில் வழங்கப்பட்ட மூலப் பிறப்புச் சான்றிதழை ஆதாரமாக - ஆவணமாக - ஏற்க மறுத்து, அதன் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தால், அதனை மாற்றிக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு நேற்று உத்தரவிட்டு இருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததுதான்.

இந்த உத்தரவை அடுத்து இத்தகைய காரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களின் விவரங்களை தேர்தல் ஆணையம் நேற்று சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் தெரிவித்தாட்சி அலுவலர்களோடு தொடர்பு கொண்டு சேகரிப்பதில் ஈடுபட்டிருந்ததாக அறிய வந்தது.

வடக்கில் இந்தக் காரணத்துக்காக வேட்பு மனு எதுவும் நிராகரிக்கப்படவில்லை என்ற தகவல் கூறப்பட்டாலும், தென்னிலங்கையில் இரண்டு, மூன்று டசின் வேட்பு மனுக்கள் இத்தகைய காரணத்துக்காக நிராகரிக்கப்பட்டு இருப்பதாக முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுதான் நிலைமை என்றால் இந்தக் காரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களும் வழக்கு போடாமலேயே ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் காரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களின் உத்தியோக பூர்வ எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால் ஒரு தகவல் இந்த அடிப்படையில் 35 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று தெரிவித்தது. அது பற்றிய சரியான தகவல் இன்று கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

* * *

2008க்கும் 2024 க்கும் இடையில் ஜனாதிபதி நிதியிலிருந்து பத்துக் கோடி ரூபாவுக்கு மேலான தொகையைப் பெற்றுக் கொண்டவர்கள் என்று கூறப்படும் 22 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் துறையின் நிதி மற்றும் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

இந்த நிதியைப் பெற்றமை தொடர்பான 22 கோப்புகளை குற்றப் புலனாய்வுத் துறை ஆராய்ந்து வருவதாகப் பொலிஸ் தெரிவித்துள்ளது.

பணத்தைப் பெறுவதில் ஏதேனும் முறைகேடு நடந்ததா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்டது.

பெயர் குறிப்பிடப்பட்டவர்களில், முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல ரூ.11 மில்லியன், முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன ரூ.10 மில்லியன், மறைந்த பிரதமர் டி.எம். ஜயரத்ன ரூ.30 மில்லியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா ரூ.18 மில்லியன் பெறுறுள்ளனர்.

நிதி உதவி பெற்றவர்கள் எனக் கூறப்படும் பிற நபர்களில் வாசுதேவ நாணயக்கார, விதுர விக்ரமநாயக்க, விமலா திசாநாயக்க, சுமேத ஜெயசேன, எஸ்.பி. நாவின்ன, ஜோன் அமரதுங்க, சரத் அமுனுகம, பி. ஹாரிசன், பியசேன கமகே, மனோஜ் சிறிசேன, பி. தயாரதனே மற்றும் எஸ்.சி. முத்துகுமாரணா ஆகியோர் அடங்குகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அநுரவுக்கு...

அடிப்படைகளும் இல்லாமல் ஊழல்வாதிகள் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிடுவது பிரதிவாதிகளுக்கு இழைக்கும் அநீதியாகும். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிடுவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தமது சுயாதீன அதிகாரத்துக்கமைய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்." – என்று ஐக்கிய குடியரசு முன்னணி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை முறைப்பாடு அளித்ததன் பின்னர் ஐக்கிய குடியரசு முன்னணியின் உப தலைவரான தீக்ஷன கம்மன்பில தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வெலிகம பகுதியில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது, "ஊழல், மோசடியற்ற குழுவினர் வெற்றி பெறும் பிரதேச சபைகளுக்கு மாத்திரமே, மத்திய அரசால் மானியங்கள் ஒதுக்கப்படும். அவ்வாறு குழு தேசிய மக்கள் சக்தியிடமே உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நிறைவேற்றுத்துறை அதிகாரமிக்க ஜனாதிபதி தனது அதிகாரத்தை நேரடியாகப் பயன்படுத்தி மத்திய அரசால் மானியங்கள் வழங்குவது குறித்து தீர்மானிப்பது தேர்தலுக்கு அழுத்தம் பிரயோகிக்கும் ஒரு செயற்பாடாகும்.

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் அபிவிருத்திகள் குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மற்றும் உரிய உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் தீர்மானம் எடுக்க வேண்டும்.

ஜனாதிபதியின் கூற்றில் அரச அதிகாரிகள் தமது அரசியல் நோக்கங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படுவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களைத் தவிர்த்து ஏனைய வேட்பாளர்களை எவ்விதமான அடிப்படைகளுமில்லாமல் ஊழல்வாதிகள் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது பிரதிவாதிகளுக்கு இழைக்கும் அநீதியாகும்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிடுவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு தமது சுயாதீன அதிகாரத்துக்கமைய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குறித்த முறைப்பாட்டில் வலியுறுத்தியுள்ளோம்.

பிரதேச சபை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்க வேண்டுமாயின் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இது முறையற்றதாகும். சுதந்திரமான முறையில் தமது வேட்பாளரை தெரிவு செய்யும் உரிமை வாக்காளர்களுக்கு உண்டு. தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களைத் தவிர்த்து ஏனைய உறுப்பினர்களை ஊழல்வாதிகள் என்று குறிப்பிடுவது முறையற்றது.

சகல வேட்பாளர்களின் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும் என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம்." – என்றார்.

## நால்வர் மீதான...

வழங்குவதற்காக மூன்று பேர் கொண்ட அமைச்சரவை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தடை தொடர்பான விடயங்களை ஆராய்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றி அமைச்சரவைக்கு விதந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காகக் குறித்த அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## இந்திய மீனவர்களின்...

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய விசைப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு பின்னர் இலங்கைச் சட்டப்படி அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. அந்த விசைப் படகுகளை மீன் பெருக்கத் திட்டத்தின் கீழ் நடுக்கடலுக்கு எடுத்துச் சென்று மூழ்கடிக்க கடற்றொழில், நீரியல்வளத்துறை திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் பிடிக்கப்பட்டு, மாவட்டக் கடற்றொழில் திணைக்களங்கள் மூலம் நீதி மன்றங்கள் ஊடாக அரசுடைமையாக்கப்பட்ட படகுகளே நடுக்கடலுக்கு இழுத்துச் செல்லப்படவுள்ளன.

இரண்டு மாவட்டங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய விசைப் படகுகள் சேதமடைந்து, படகுகளின் உள்ளே மழை நீரும் கடல் நீரும் உட்புகுந்து காணப்படுவதனால் அவற்றை அவை தரித்துள்ள கரையோரப் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்துமாறு மீனவர் சங்கங்கள் வலியுறுத்துகின்றன. மயிலிட்டித் துறைமுகத்தில் காணப்படும் இத்தகைய படகுகளை அகற்றுமாறு மீனவர்களுடன் துறைமுக அதிகார சபையும் கோரிக்கை விடுத்து வருகின்றது.

இவற்றைச் சீர்செய்யும் வகையிலும் மீன் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கிலும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கடற்றொழில் திணைக்களம் சுட்டிக்காட்டுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடுக் கடலில் மூழ்கடிக்கப்படவுள்ள படகுகளைக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கடந்த 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் நேரில் பயணித்து அவதானித்து அதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளார் எனத் தெரிகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்து திரும்பியதும் இந்தப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது. அதுவரை இது தொடர்பில் இரகசியம் காக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இ.போ.சபையால் கை விடப்பட்ட 15 பஸ்கள் காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து கடற்படையினரின் கப்பல்களில் ஏற்றிச் செல்லப்பட்டு நடுக்கடலில் இப்படி மீன் பெருக்கும் நோக்கத்துக்காக இறக்கப்பட்டன.

இலங்கையில் சிறைப் பிடிக்கப்பட்ட தமது படகுகளை மீட்டுத் தருமாறு இந்தியாவின் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி மீனவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றபோது, நடுக் கடலில் அவற்றை மூழ்கடிக்கும் இலங்கையின் திட்டம் இந்திய மீனவர்களின் மனநிலையில் மேலும் விரிசலை ஏற்படுத்தக்கூடும் என்றே கருதப்படுகின்றது.

ஏனெனில், இலங்கையில் இந்திய மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் 2022 ஆம் ஆண்டு இதே போன்று ஏலம் விடப்பட்ட சமயம் இந்தியாவில் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

தற்போது யாழ்ப்பாணத்தில் 57 படகுகளும், மன்னாரில் 7 படகுகளும், கிளிநொச்சியில் 10 படகுகளும் அரசுடைமையாக்கப்பட்ட இந்தியப் படகுகளாக உள்ளன. இவற்றையே நடுக்கடலில் மூழ்கடிக்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இதற்கிடையில் இந்தப் படகுகளில் சிலவற்றைத் தங்கள் பாவனைக்குத் தருமாறு இலங்கைக் கடற்படை இலங்கை அரசிடம் வலியுறுத்தி வருகின்றது என்று மற்றொரு வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது.

## மோடியுடன்...

ஆஸ்திரேலியாவில் இருந்து அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அன்புள்ள திரு. சுமந்திரன்,

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான தூதுக்குழு சந்திப்பில் நீங்கள் ஒரு பகுதியாக இருந்தால், விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் உங்கள் சொந்தக் கட்சிக்குள் மட்டுமல்ல, பிற கட்சிகளின் உறுப்பினர்களுடனும் முன்கூட்டியே அனைத்து பங்கேற்பாளர்களுடனும் பகிர்ந்துகொள்ளப்படுவதை உறுதி செய்யுமாறு நான் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்க் கட்சித் தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்ட சீரற்ற எதிர்பார்ப்புகள், குறிப்பாகத் தமிழ் சுயாட்சி தீர்வுகள் குறித்து, தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவிக்கப்படாதமை குறித்து இந்தியப் பிரதிநிதிகள் தொடர்ந்து அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தத் தெளிவின்மை நமது மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான முயற்சிகளைக் குறைமதிப்புக்கு உட்படுத்துகின்றது.

எனவே, வரவிருக்கும் இந்தக் கூட்டத்தின்போது, அனைத்து தமிழ்ப் பிரதிநிதிகளும் ஒன்றுபட்ட மற்றும் உறுதியான நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டியது அவசியம். கூட்டத்தின் ஒவ்வொரு நிமிடமும் தமிழ் மக்களின் நலன் மற்றும் வளர்ச்சிக்கு விலைமதிப்பற்றது.

தமிழ்க் கட்சித் தலைவர்களின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை விட, நமது சமூகத்தின் பரந்த நலன்களில் கவனம் செலுத்துவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

இந்த விவாதங்கள் மிகுந்த தொழில் முறையுடன், குறிப்பாக உலகின் மிகப் பெரிய ஜனநாயகத்தின் தலைவரின் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும். - என்றுள்ளது.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து இரு நாட்டு அரசுகளுடனும் பேசவுள்ளேன்

## தமிழரசின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“ஈழத்தமிழர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து இலங்கை அரசுடனும், இந்திய அரசுடனும் பேசவுள்ளேன்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். நெடுந்தீவில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இந்த விடயத்தை அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“இந்திய மீனவர்களின் அத்துமீறல் வருகை இதுவரையில் ஈழத்தமிழர்களின் பொருளாதாரத்தை அரைவாசி அழித்துவிட்டது. தமது பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள முடியாத நிலையிலும், இயல்பு வாழ்க்கையை இழந்த நிலையிலும் ஈழத்தமிழர்கள் இருக்கின்றார்கள்.

குறிப்பாக யுத்தம் முடிவடைந்த 15 ஆண்டுகளில் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் பொருளாதாரம் பெரியளவில் தற்போது அழிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான அடிப்படைக் காரணமே இந்திய மீனவர்களின் அத்துமீறல் வருகைதான்.

அவரகளுடைய மீன்பிடிப் பொறிமுறைகளால் எமது பகுதி மக்களின் மீன்பிடி வலைகள் அறுந்துள்ளன. அத்துடன் உற்பத்திகள் முடக்கப்பட்டுள்ளன. இதனால் எமது பகுதி மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

குறிப்பாக புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் மேலும் அவர்களது வாழ்வாதாரங்களை அழிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்கின்றது.

இது தொடர்பாக நெடுந்தீவு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மீனவர்கள் பலர் என்னிடம் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, முன்பெல்லாம் வாரத்தில் ஓரிரு நாட்களில் மட்டுமே இந்திய மீனவர்கள் வருவார்கள். இடைப்பட்ட நாட்களில் எமது வாழ்வாதாரத்தைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பிருக்கின்றது. இப்பொழுது அதற்குக் கூட வழியில்லாமல் உணவுக்குக் கூட நாம் கஷ்டப்படுகின்றோம் என்று நெடுந்தீவு மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

எனவே, இந்த விடயத்தை அரச தரப்பிடம் நான் எடுத்துரைப்பேன். இந்தியத் தரப்பிடம் எமது மக்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து தீர்வு காண்பதற்கான அழுத்தம் கொடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளேன்.” – என்றார்.




# உள்ளூராட்சித் தேர்தல் மீறல்: இதுவரை 413 முறைப்பாடுகள்

வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மீறல் தொடர்பில் இதுவரை (மார்ச் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் 1 ஆம் திகதி) 413 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 3 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 382 முறைப்பாடுகளும், ஏனைய விடங்கள் தொடர்பில் 28 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிங்கள மயமாக்கல் திட்டம்!

எல்லோரும் இலங்கையர்கள் என்ற பெயரில் தேசிய மக்கள் சக்தி எல்லா விடயங்களிலும் நுட்பமாக சிங்கள மயமாதலை செய்து வருகின்றது என்பதைத் தமிழ் ஊடகம் ஒன்று விலாவாரியான விவரங்களுடன் அம்பலப்படுத்தியிருக்கின்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தைச் சிங்கள மயமாக்கும் திட்டமிடப்பட்ட நகர்வு அங்கிருந்து நுணுக்கமாகத் தொடங்கியுள்ளது.

அங்கு பேரவை உறுப்பினர்களில் தமிழர்கள் ஆக ஐவர் மட்டுமே. மற்றைய ஏழு பேர் சிங்களவர்கள். முஸ்லிம்கள் மூவர் என நிரப்பியுள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இரு சிங்களவர்கள் மட்டுமே கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அது ஏழாக அதிகரித்துள்ளது.

இதன் பின்னணியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளரே காணப்படுகின்றார் என்று அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடத்தின் பீடாதிபதியாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண்மணியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் அந்த ஊடகம் வெளிப்படுத்தியுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் உபவேந்தருக்கான வெற்றிடம் வரும் நிலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தற்போதைய தொழில்நுட்ப பீட பீடாதிபதியும் சேவை மூப்பின் காரணமாக அந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

உபவேந்தரைத் தெரிவு செய்யும் பொறுப்பில் கணிசமான பங்கு பேரவை உறுப்பினர்களிடம் இருக்கின்ற நிலையில், அவர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுவோரில் இருந்து பொருத்தமானவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதி வசம் இருக்கின்றமையால் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மேற்படி பெண்மணி போட்டியாளர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு அப்பதவிக்கு வரக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

வரலாற்றில் முதற் தடவையாக ஒரு சிங்களவர் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக நியமிக்கப்படக் கூடிய கட்டமைவு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி மிக நுட்பமாக திருகோணமலை மற்றும் அம்பாறையில் சிங்கள மயமாதலை செயற்படுத்தி வருகின்றது என்று குற்றம் சுமத்தப்படும் பின்புலத்திலேயே இந்த விடயங்கள் அரங்கேறியுள்ளன.

கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சிங்கள மயப்படுத்தும் நுட்பமான நகர்வு தொடர்பில் சிறுபான்மையினருக்கு ஏற்பட்டுள்ள இந்த அச்சம் குறித்து உண்மை நிலைமையை உயர் கல்வி அமைச்சர் என்ற முறையில் பிரதமர் ஹரிணி அமரசூரியவும், இந்த அரசாங்கத்தில் சிறுபான்மையினரான தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தி முக்கிய பொறுப்பில் இருக்கின்ற திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரா போன்றவர்களும் தெளிவுபடுத்த வேண்டும் என தமிழ், முஸ்லிம் மக்கள் உரிமையோடு எதிர்பார்க்கிறார்கள். உண்மையை வெளிப்படுத்துவார்களா அவர்கள்?






# திட்டங்களின் நடைமுறையாக்கத்தை நேரில் சென்று பார்வையிட வேண்டும்

## வடக்கின் திணைக்களத் தலைவர்களுக்கு ஆளுநர் பணிப்பு





2025ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறையாக்கத்தை நேரடியாகச் சென்று திணைக்களத் தலைவர்கள் பார்வையிட வேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையாவது திட்டமுன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை செயலாளர்கள் நடத்தவேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர்,

“தூய்மையான இலங்கை செயற்றிட்டம் எமது மாகாணத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். தூய்மையான இலங்கை செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு திட்டங்களை அமைச்சுக்களின் செயலாளர்கள் தயாரிக்க வேண்டும்.

மேலும் ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் தங்களது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கடமை நேரம், வரவுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். பொதுமகன் அலுவலகத்துக்கு வந்து அலுவலர்களுக்காக காத்திருக்கக் கூடாது. அதேநேரம் டிஜிட்டல் மயமாக்கல் செயற்றிட்டத்தையும் படிப்படியாக நாம் ஆரம்பிக்க வேண்டும்.

2025ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களின் நிதி முன்னேற்றம் தொடர்பில் மாத்திரமே வடக்கு மாகாண சபையின் இணையத் தளத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. நிதி முன்னேற்றத்துடன், பௌதீக முன்னேற்றத்தையும் இணையத்தளத்தில் வெளியிட வேண்டும்.

மேலும் திட்டங்களை அடையாளப்படுத்தும்போது யாராவது சொல்வதையோ, ஒளிப்படங்களில் பார்ப்பதையோ விட ஓரிடத்தை நேரில் சென்று பார்வையிட்டால்தான் அந்தத் திட்டத்தை செய்ய முடியுமா, இல்லையா என்பது தெரியவரும். மேலும், பின்தங்கிய பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டால்தான் அந்த மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் வரும். எனவே, திணைக்களத் தலைவர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் சுழற்சிமுறையில் பின்தங்கிய கிராமங்களை நேரில் சென்று பார்வையிடுங்கள்.

2026ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்களின் முன்மொழிவுகளை எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் நாம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. எனவே, அதற்கான திட்டமிடல்களையும் இப்போதே ஆரம்பியுங்கள்.

குறிப்பாகவீதிஅபிவிருத்தித்திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் என்பன எவ்வளவு நிதி கிடைத்தால் வீதிகளை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை அடையாளப்படுத்த வேண்டும்.” – என்றார் ஆளுநர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், ”ஒதுக்கப்பட்ட நிதியை உரிய காலத்துக்குள் செலவு செய்து முடிக்க வேண்டும். கட்டடங்கள் திணைக்களம் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியிருக்கின்றார்கள். திணைக்களத் தலைவர்களும், அமைச்சின் செயலாளர்களும் சரியான ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.” – என்றார்.

தொடர்ந்து வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.குகதாசன் உரையாற்றும்போது,

”கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் குறைவளவான கட்டுநிதியே விடுவிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் சில திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டிருந்தாலும் அதற்கான நிதியை வழங்க முடியாமல் சிக்கல்களை எதிர்கொண்டிருக்கின்றோம். எனவே, இம்முறை ஒதுக்கப்பட்ட நிதியில் எவ்வளவு கட்டுநிதி விடுவிப்பார்கள், எப்படி விடுவிப்பார்கள் என்பது தொடர்பான தெளிவான திட்டவரைவு தேவை.” – என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சு, வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு ஆகிய 5 அமைச்சுக்களினதும் அதன் கீழான திணைக்களங்களினதும் முன்னேற்றங்கள் தனித்தனியாக ஆராயப்பட்டன.

இதன்போது திட்டநடைமுறையாக்கத்தில் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் திணைக்களத் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன. அது தொடர்பான பொருத்தமான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

# குடிவரவு, குடியகல்வு திணைக்கள அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவ அமைச்சரவை அனுமதி




குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு விடயஞ்சார் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வவுனியா பிராந்திய அலுவலகத்திற்குப் பயணம் செய்வதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

வடமாகாண மக்கள் அதிகளவில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளமையால், அவர்களுக்கான துரித சேவைகளை வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிப்பது பொருத்தமானதென கடந்த ஜனவரி 31 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்மொழியப்பட்டுள்ள யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் இம்மாதத்திலேயே நிறுவுவதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்:
# 4 மாவட்டங்களின் வாக்குச்சீட்டு அச்சிடும் பணி நிறைவு பெற்றது



உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வவுனியா, பொலன்னறுவை, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய 4 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக அரசாங்க அச்சுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான வாக்குச்சீட்டுகள் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் பிரதீப் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

அத்துடன், 9 மாவட்டங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கித்துள், தென்னை, பனை விவசாயிகளுக்கு காப்பீடு

நாட்டில் கித்துள், தென்னை மற்றும் பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்காக வருடாந்தம் புதுப்பிக்கத்தக்க வகையில் விபத்து ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை செயற்படுத்த விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை திட்டமிட்டுள்ளது.

தொழிலாளர்களின் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

தொழிலாளர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை இந்த திட்டத்தை செயற்படுத்த தீர்மானித்துள்ளது.

# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள்

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்கு செல்லும் மக்களுக்கான விசேட போக்குவரத்து சேவைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலதிகமாக 500 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ஜீவக பிரசன்ன தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் கால விசேட போக்குவரத்து சேவைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இடம்பெறும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.



இதேநேரம், எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் மேலதிகமாக 40 ரயில்களை சேவையில் ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பதுளை, பெலியத்த, திருகோணமலை, அனுராதபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு குறித்த ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# கொக்கட்டிச்சோலை தாந்தாமலை பகுதியில் காட்டுயானை தாக்கியதில் பெண் ஒருவர் பலி

மட்டக்களப்பு – கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாந்தாமலை பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை காட்டுயானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தாந்தாமலை, ரெட்பானா கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான மாமாங்கம் சந்திரா என்பவரே இந்த சம்பவத்தில் பலியானவராவார்.

தனது வீட்டு வளவினுள் புகுந்த யானைகளைக் கண்டு இந்தப் பெண் உயிர் தப்புவதற்காக ஓடிய போது காட்டு யானை மறித்து தாக்கியதில் இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

சம்பவம் தொடர்பில் பட்டிப்பளை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி டினேஸ்வரன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தை பிரேத பரிசோதனைக்குப் பணித்தார். பொலிஸார் இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# பிரதமர் மோடியுடன் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தம் தொடர்பில் தகவல் வழங்கப்படும்

## நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

நாளை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் அதன்போது கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் ஒப்பந்தத்தின் நிறைவில் அறிவிக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் வைத்து இந்த விடயம் தொடர்பில் அவரிடம் வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது வலுசக்தி, சுகாதாரம், டிஜிட்டல்



பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவித்தார்.

நாளை இலங்கைக்கு வரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் முக்கிய இருதரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரினால் விசேட உரை நிகழ்த்தப்படும்.

அத்துடன் இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது கைச்சாத்திடப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பான தகவல்கள் இடைக்கிடையே வழங்கப்படும் எனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



# ஜனாதிபதி நிதியத்தின் நிதி முறைகேடு தொடர்பில் சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்




ஜனாதிபதி நிதியத்தின் நிதியை முறைகேடாகப் பயன் படுத்தியதாகக் கூறப்படும் 22 பேர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் "பி" அறிக்கையை சமர்ப்பித்து இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியவர்களுள் பிரபல அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் உள்ளடங்குகின்றனர் என குற்றப்புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# ஹட்டனில் பிரபல பாடசாலைக்கான வீதியில் வடிகால் நீர் ஓடுவதால் மாணவர்கள் பாதிப்பு!



(மஸ்கெலியா நிருபர்)

மதிய மலை நாட்டில் தற்போது பெய்து வரும் மழைக்கு மத்தியில் ஹட்டன் நகரில் அமைந்துள்ள கீழ் பிரிவு பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் பிரதான வீதியில் வடிகால் தடை ஏற்பட்டு உள்ளது.

இதனால் மழை பெய்து வரும் வேளையில் கழிவு நீர் கலந்த மழை நீர் வீதியில் செல்வதால் தாங்கள் பாரிய சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர் என மாணவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஹட்டன் நகர சபை முன் வந்து இப் பகுதியில் உள்ள அனைத்து வடிகால்களையும் சுத்தம் செய்து மாணவர்களின் நலன் பேண வேண்டும் எனக் கோரப்படுகின்றது.











# பாழடைந்த வீட்டில் மனித பாவனைக்கு உதவாத வகையில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் உணவுப்பொருள்கள் தயாரிப்பு

## மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் குழுவினர் அதிரடி நடவடிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மூர்வீதி பகுதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் மனித பாவனைக்கு உதவாத வகையில் சுகாதார சீர்கேடுகளுடன் உணவுப்பொருள்கள் தயாரிக்கப்பட்டு மன்னாரில் உள்ள உணவகங்களுக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டு வந்த நிலையில் அந்த வீட்டை நேற்றைய தினம் புதன்கிழமை மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தலைமையிலான குழுவினர் சுற்றி வளைத்தனர்.

பாழடைந்த வீடு ஒன்றில் உணவு பொருள்கள் தயாரிக்கப்படுவதாகவும், அங்கு பெரும் துர்நாற்றம் வீசி வருவதாகவும் மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை அப்பகுதிக்குச் சென்ற சுகாதார வைத்திய அதிகாரிகள் குழுவினர் மனித பாவனைக்கு உதவாத ஒரு தொகுதி உணவுப் பொருள்களை மீட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

மக்கள் வசிக்க முடியாத நிலையில் காணப்பட்ட அந்த வீட்டில் பெரும் அளவிலான உணவு பொருள்கள் தயாரிக்கப்பட்டு வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

மனித பாவனைக்கு உட்படுத்த முடியாத அந்தப் பகுதியில் சுகாதார வசதிகள் எவையும் முன்னெடுக்காத நிலையில் உணவுப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு வந்தமை சுகாதார வைத்திய அதிகாரிகள் குழுவினரால் கண்டு பிடிக்கப்பட்டது.

உணவு பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக இந்த வீட்டில் உணவு பொருள்கள் தயாரிக்கப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட சுகாதார வைத்திய அதிகாரி குழுவினர் அங்கிருந்து மனித பாவனைக்கு உதவாத வகையில் தயாரிக்கப்பட்ட உணவு பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி உணவுப் பொரகளை நீதிமன்றத்தின் அனுமதி பெற்று அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது. எவ்வித அனுமதியும் இன்றி மனித பாவனைக்கு உதவாத வகையில் உணவு தயாரித்த மேற்படி நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இடத்தில் தயாரிக்கப் படுகின்ற உணவுப் பொருகள் மன்னார் பகுதியில் உள்ள பல்வேறு உணவகங்களுக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டமையும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தெரிவித்தார்.













# இலங்கைக்கு வரும் பிரதமர் நரேந்திர மோடி மீனவர் விவகாரத்திற்குத் தீர்வு தர வேண்டும்!

## வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் எதிர்பார்ப்பு

இந்திய, இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை காண்பதற்குரிய நல்ல சமிக்ஞையாக தமிழக மீன வர்களின் சந்திப்பு அமைந்தது எனத் தெரிவித்துள்ள வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சா ளர் அன்னலிங்கம் அன்னராசா, இலங்கை வரும் இந் தியப் பிரதமர் மீனவர் விவகாரத்திற்கு தீர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் கோரினார்.

இந்தியாவினுடைய பிரதமர் நரேந்திர மோடி ஐயா அவர்கள் இலங்கைக்கு வருவதை வடக்கு கடற்தொழில் சமூகமாகிய நாம் வரவேற்பதோடு மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

எனவே இந்த விஜயத்தின் போது நீண்ட காலமாக புரை யோடிப் போய் இருக்கின்ற இலங்கை, இந்திய மீனவரு டைய பிரச்சினைக்கு நிரந்தரமான சுமுகத் தீர்வை ஏற்படு வதற்கு பாரத பிரதமரும் இலங்கையினுடைய ஜனாதி பதியும் விட்டுக்கொடுப்போடு நல்லெண்ண அடிப்படையில் நடவடிக்கைவ்மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இலட்சக் கணக்கான மக் களுடைய வாழ்வாதார பிரச்சுனையில் கரிசனையெடுத்து இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு



ஏற்படுவதற்கு இந்த விஜயம் வழிகோலும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கடற்றொழில் சமூகத்திற்கு தென்படுகிறது.

அவ்வாறு ஒரு சிறத்த தீர்வை ஏற்படுத்துவார்கள் என மிக எதிர்பார்ப்புடன் நாங்கள் காத்திருக்கின்றோம். – என்றார்.

# வவுனியாவில் வழிபாடுகளுடன் பிரசாரப் பணியை ஆரம்பித்தது கோடாரிச் சின்ன சுயேச்சைக் குழு







(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபையில் கோடாரி சின்னத்தில் போட் டியிடும் சுயேச்சைக் குழு –01 பூஜை வழிபாடுகளின் பின் தனது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

வவுனியா, குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளின் பின் பிரசார நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா மாநகர சபை குடியிருப்பு வட்டார வேட்பாளரும், சுயேசைக் குழுவின் தலைவருமான சி.கிரி தரன் மற்றும் மாநகரசபையில் அந்த சுயேசைக் குழு சார் பில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்து கொண்ட னர்.

இதன்போது கருத்து தெரிவித்த முதன்மை வேட்பாளர் சி.கிரிதரன், கடந்த காலங்களில் மக்கள் மாறி மாறி பல கட்சிகளுக்கும் வாக்களித்து வெறுப்படைந்து போயுள்ளனர். மக்களுக்கான சேவைகள் கூட உரிய வகையில் முன்னெடுக்கப் படவில்லை. இதனால் மக்களில் இருந்து ஒருவனாக இந்த ஊரைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையில் எமது மண்ணை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்களுடன் இந்தத் தேர்தலில் சுயேச்சையாக களமிறங்கியுள்ளோம். உங்கள் அபிலாசைக ளும், எண்ணங்களும் நிறைவேற வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சுயேச்சைக் குழு ஒன்றிக்கும் அதன் கோடாரி சின்னத்திற்கும் உங்கள் வாக்குகளை வழங்குங்கள். – என்றார்.



# ஐ.தே.க. வவுனியா மாவட்ட வேட்பாளர்களுடன் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் கலந்தாய்வு

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிடும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கான கூட்டம் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

வவுனியா, ஓவியா விருந்தினர் விடுதியில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ம.மயூரதன் தலைமையில் நேற்று இக்கூட்டம் இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக் கமைய வடக்கு – கிழக்கு பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான முதலாவது கூட்டமாக இது அமைந்திருந்தது.

இதில், வவுனியா மாநகரசபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதே சபை என்பவற்றில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களான கட்சியின பெதுச் செயலாளர் தலதா அத்துகோரளை, தவிசாளர் வஜிர அபயவர்த்தன, கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் விதம் தொடர்பாகவும், கட்சியின் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தனர்.















# நித்தியானந்தாவின் நிலை குறித்து கைலாசாவில் இருந்து விளக்கம்



நித்தியானந்தா உயிரிழந்துவிட்டார் என வெளியான தகவலை கைலாசா மறுத்துள்ளது.

இந்த விடயத்தைக் கண்டித்து கைலாசா அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

நித்தியானந்தாவின் சகோதரி மகன், நித்தியானந்தா ஜீவசமாதி அடைந்துவிட்டார் என காணொலி ஒன்றில் தெரிவித்திருந்தார். இது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

இவ்வாறு வெளியான தகவல்களை மறுக்கும் வகையில் கைலாசா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் " நித்தியானந்தா ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும், உயிருடனும், உத்வேகத்துடனும் இருக்கிறார் என கைலாசா உறுதியாக அறிவிக்கிறது. நித்தியானந்தாவை இழிவுபடுத்தவும் ,அவதூறு செய்யவும் தொடுக்கப்பட்ட இந்த தீய அவதூறு பிரசாரத்தை கைலாசா திட்டவட்டமாக மறுக்கிறது."எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பும் அவர் இறந்துவிட்டார் எனவும் வதந்திகள் பரவியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொகுதி மறுசீரமைப்பு விவகாரம்:

# பிரதமர் மோடியை சந்திக்க நேரம் கேட்கிறார் ஸ்டாலின்



தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடியை சந்திக்க முதல்வர் மு.க ஸ்டாலின் நேரம் கேட்டுள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் இது குறித்து பிரதமர் மோடிக்கு கடிதம் ஒன்றை எழுதி உள்ளார். அந்த கடிதம் குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"பிரதமர் மோடி அவர்களே, சென்னையில் 22.03.2025 அன்று நடைபெற்ற நியாயமான தொகுதி மறுவரையறைக்கான கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தின் தீர்மானங்களை, பல்வேறு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தங்களிடம் நேரில் அளித்து, தொகுதி மறுவரையறை தொடர்பான எங்கள் கவலைகளை தெரிவிக்க நேரம் கேட்டிருந்தோம்.

ஏற்கெனவே கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இந்த முக்கியப் பிரச்சினையில் எங்களது ஒன்றுபட்ட நிலைப்பாட்டைத் தெரிவிக்க தங்களை உடனடியாகச் சந்திக்கக் கோருகிறோம். தங்களது விரைவான பதிலுக்காகக் காத்திருக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# விருதுநகரில் தீ விபத்து; குடிசைகள் எரிந்து சேதம்





விருதுநகரில் நேற்று ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 26 குடிசைகள் எரிந்து முற்றிலும் சேதம் அடைந்தன.

விருதுநகரில் சொக்கநாத சுவாமி கோயில் அருகே உள்ள பெருமாள் கோயில் தெருவில் பால் பண்ணை பேட்டை உள்ளது. இங்கு 100 இற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. 400 இற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். மிக நெருக்கமாக வீடுகள் உள்ள இந்த பகுதியில் நேற்று திடீர் தீ விபத்து ஏற்பட்டது. தீ வேகமாக அடுத்தடுத்த வீடுகளுக்கும் பரவியது. இதனால் பொதுமக்கள் அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர்.

குழந்தைகளையும் முதியோர்களை அழைத்துக் கொண்டு அனைவரும் பால்பண்ணை பேட்டையில் இருந்து வேகமாக வெளியேறினர். நான்கு வீடுகளில் இருந்த சிலிண்டர்கள் வெடித்துச் சிதறின. தீ விபத்து குறித்து தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு வீரர்கள் சுமார் 2 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். அதற்குள் 26 வீடுகள் முற்றிலுமாக தீயில் எரிந்து சேதமடைந்தன.

பால்பண்ணையில் இருந்த 10 இற்கும் மேற்பட்ட பசுக்கள் பத்திரமாக மீட்கப்பட்டன. பொதுமக்கள் விரைவாக அங்கிருந்து வெளியேறியதால் உயிரிழப்பு தடுக்கப்பட்டது. ஆனாலும் தீ விபத்தில் 26 வீடுகளிலும் இருந்த அனைத்துப் பொருள்களும் எரிந்து சேதமடைந்தன.

பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு அருகில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து நடந்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் விபத்துக்கான காரணம் குறித்து விருதுநகர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




# செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனம் மீது மியன்மார் இராணுவம் துப்பாக்கிச் சூடு

செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரணப் பிரிவினர் மீது மியன்மார் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிவாரணப் பொருள்களை ஏற்றிச் சென்ற சீன செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் சொந்தமான வாகனத்தின் மீதே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

வீதிச் சோதனையை மீறி வாகனம் பயணித்தமையினாலேயே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக மியன்மார் இராணுவம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இந்த துப்பாக்கிச் சூட்டில் எவரும் பாதிக்கப்பட வில்லை எனவும் மியன்மார் இராணுவம் தெரிவித்துள்ளது



## மியன்மார் நிலஅதிர்வு:

# 4 நாள்களுக்குப் பிறகு உயிருடன் மீட்கப்பட்டார் வயோதிப பெண்



மியன்மாரில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த வயோதிப பெண் ஒருவர் நான்கு நாள்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார் றன சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மியன்மாரில் கடந்த 28ஆம் திகதி 7.7 மெக்னிடியூட் அளவில் முதலாவது நில அதிர்வு பதிவாகியது.

இந்த நிலஅதிர்வினைத் தொடர்ந்து பல்வேறு அடுக்குமாடி கட்டடங்கள் சேதமடைந்தன.

சேதமடைந்த கட்டடமொன்றின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 63 வயது மதிக்கத்தக்க வயோதிப பெண் ஒருவரை, மீட்புக் குழுவினர் 4 நாள்களுக்குப் பின் உயிருடன் மீட்டுள்ளனர்.

அவருக்கு தற்போது தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.





# ஏமன் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் நால்வர் உயிரிழப்பு

ஏமனின் ஹொடைடா பகுதியில் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்ற தாக ஹவுதி சுகாதார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் அனீஸ் அலஸ்பாஹி தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் என அனீஸ் அலஸ்பாஹி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் ஹவுதி படைகளுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் இதுவரை 60 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.







# இன்றைய ராசி பலன்கள் -03.04.2025




இன்று நீங்கள் கடுமையான சூழல்களை சந்திக்க நேரிடும். பொறுமையுடன் கையாளுங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி சமநிலையுடன் இருக்க முயலுங்கள். தெய்வீகக் காரியங்கள் உங்கள் மனதுக்கு நிம்மதியையும் மன நிறைவையும் தரும்.

நீங்கள் உங்கள் பணியில் சில தவறுகளை செய்ய நேரலாம். பணி செய்யும் முறையை திட்டமிட்டு அமைத்துக் கொள்வது நல்லது.

இன்று உங்கள் வாழ்க்கைத் துணையாரின் விருப்பப்படி நடந்து கொள்ளுங்கள். இதன் மூலம் இல்லத்தில் தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கலாம்.

இன்று பண வரவிற்கான வாய்ப்புகள் குறைவாக காணப்படுகின்றது. கூடுதல் செலவினங்களை நீங்கள் சந்திக்க நேரலாம்.

இன்று உங்கள் ஆரோக்கியத்தில் பெரிய குறைபாடுகள் ஏதும் இருக்காது. கண்களில் எரிச்சல் பல் வலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புண்டு.




இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக அமையாது. நீங்கள் கடுமையாகப் போராட நேரலாம். இன்று அசௌகரியங்கள் காணப்படலாம். துயரமான சூழ்நிலை காரணமாக நீங்கள் திருப்தியையும் மன அமைதியையும் இழப்பீர்கள்.

இன்று பணியில் திருப்திகரமற்ற நிலை இருக்கும். பணியிடத்தின் சூழ்நிலையும் சாதகமாக இருக்காது.

நல்ல புரிந்துணர்வு இல்லாத காரணத்தால் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம்.

இன்று பணப்புழக்கம் குறைவாகவே இருக்கும். இழப்புகளை சமாளிக்க பெரிய முதலீட்டிற்கான முடிவை தவிர்க்கவும்.

மன அழுத்தத்தின் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று அனைத்து விஷயங்களும் சுமுகமாக நடக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்கள் மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் நல்ல வாய்ப்பு கிடைக்கும் அற்புதமான நாள்.

இன்று வளர்ச்சிக்கான சிறந்த ஒரு வாய்ப்பை நீங்கள் இழக்க நேரிடலாம். திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் மேம்போக்காகவும் சுமுகமாகவும் நடந்து கொள்ள வேண்டும். வலுவான அனுகுமுறை நல்லுறவை பாதிக்கும்.

இன்று மோசமான நிதிநிலைமை காணப்படுகின்றது. எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

இன்று சளி இருமல் போன்ற உபாதைகள் ஏற்டலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.




எதிர்காலத்தில் சாதிப்பதற்கான பெரிய கனவொன்றை இன்று காண்பீர்கள். உங்கள் இலக்கை நோக்கி உங்கள் ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள்.

மேலதிகாரிகள் உங்கள் திறமையை பாராட்டுவார்கள். உங்கள் செயலுக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்களைப் பெருமையாக நினைப்பார்கள்.

இன்று உங்கள் வாழ்க்கைத் துணையுடன் இனிமையான வார்த்தைகளையும் உணர்வுகளையும் பகிரந்து கொள்வீர்கள். உங்கள் எதிர்காலம் பற்றி முடிவு எடுப்பீர்கள்.

இன்று பண விஷயங்களில் சுதந்திரமாகவும் திருப்தியுடனும் செயல்படுவீர்கள். உபயோகமான காரியங்களுக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். உங்கள் மன உறுதியும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று நீங்கள் துடிப்புள்ளவராக இயங்க மாட்டீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் செய்ய வேண்டியது அவசியம்.

உங்கள் உழைப்பிற்கான பலன் இன்று கிடைக்கும். உங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் வாழ்க்கைத் துணையிடம் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்ற நாள். உங்களுடைய சமநிலையான மற்றும் சமயோசித அணுகுமுறையே அதற்கு காரணமாக அமையும்.

பண வரவு தாராளமாகக் காணப்படும். உடனடி மற்றும் எதிர்கால தேவைகளுக்கான பணம் உங்களுக்கு கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இன்று நீங்கள் நல்ல தேக பலத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் அசௌகரியங்களை உணர்வீர்கள். மன அழுத்தம் ஏற்படும். பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுவதன் மூலம் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இன்று சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நீங்கள் உங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மனக் குழப்பங்கள் காரணமாக தவறாக புரிந்து கொண்டு உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். அத்தகைய உணர்வுகளை தவிர்ப்பது நல்லது.

பண இழப்புகள் ஏற்படலாம். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று தலைவலி ஏற்படலாம். தியானம் மூலம் மன அழுத்தத்தை குறைக்கலாம்.




இன்று எதிர்பாராத சில நிகழ்வுகள் காரணமாக சற்று பதற்றமான நிலை காணப்படும். நீங்கள் என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் நிலை காணப்படும்.

இன்று வேலைகள் மலை போல் வந்து குவியும். எனவே அதற்கேற்றாற்போல் திட்டமிட்டு வேலை செய்வது நல்லது.

நகைச்சுவை உணர்வுடன் இருக்க முயலுங்கள். மனதை அமைதியாக வைத்திருங்கள். உங்கள் துணையுடன் பேசும் பொழுது அவரை புரிந்து கொண்டு நல்லுறவை பராமரிக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலை கவலையை அளிக்கக் கூடியதாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள்.

தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இறைவழிபாட்டின் மூலம் அதிலிருந்து விடுபடலாம்




இன்றைய நாள் உங்களுக்கு முன்னேற்றகரமான நாளாக அமையும். உங்கள் இலக்கை அடைவதற்கான வழிமுறைகளை காண்பீர்கள். உங்கள் பாதையில் வரும் தடைக் கற்களை உடைத்தெறிவீர்கள்.

இன்று உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

நீங்கள் இன்று உங்கள் வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வும் நல்லுறவும் மேம்படும்.

இன்று திருப்திகரமான நிதிநிலை இருக்கும். சேமிப்பு மூலம் பணவரவு கூடும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். நீங்கள் நல்ல தேக பலத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -03.04.2025




நடப்பவை யாவும் நன்மைக்கே என்று எளிதாக எடுத்துக்கொண்டால் இன்று நற்பலன்களே கிட்டும். புதிய மனிதர்களுடன் பழகுவதற்கும் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இன்று உகந்த நாள். உங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வதன் மூலம் உங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும்.

நீங்கள் எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி வேலை செய்வீர்கள். உங்களுடைய இந்த மனப்பான்மை காரணமாக வேலையை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுத்து உங்கள் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அமைதியாக சகஜமாகப் பழகுவீர்கள். அதனால் நல்ல புரிந்துணர்வும் நல்லுறவும் மேம்படும்.

இன்று பணவரவு காணப்படும். உங்கள் வங்கி இருப்பு நல்ல முறையில் பராமரிக்கப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். நல்ல ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்களின் குறிக்கோள்களை அடைய மிகச் சிறந்த நாளாக இந்த நாள் அமையும். பயணங்களால் வளர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. செழிப்பான எதிர்காலத்துக்கு இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று மலை போல் குவியும் வேலையின் சுமை காரணமாக கவலைப்படுவீர்கள். திறமையுடன் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மனதுக்குள் அலைமோதும் கவலைகள் காரணமாக உங்கள் துணையுடன் பேசும் போது பேச்சில் கடுமை காணப்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். வரவுடன் செலவும் சேர்ந்து வருவது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நேர்மறையான சிந்தனைகள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று அசௌகரியங்களும் தேவையில்லாத மன வருத்தங்களும் மேலும் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று அதிக பணிகள் காரணமாக நீங்கள் பிஸியாக இருப்பீர்கள். வேலை அதிகமாக இருந்தாலும் புத்திசாலித்தனமாக சமாளிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு அல்லது வாக்குவாதம் ஏற்படலாம். நட்பான அணுகுமுறை தேவை.

நிதியைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

முந்தைய இரவின் தூக்கமின்மை காரணமாக மன அழுத்தமும் அதன் விளைவாக தலைவலியும் காணப்படும்.




இன்று நீங்கள் கவலையுடன் காணப்படுவீர்கள். மன அழுத்தமான சூழ்நிலைகளில் சமநிலை இழந்து காணப்படுவீர்கள். மனதை அமைதியுடனும் இலேசாகவும் வைத்திருக்க வெளியிடங்களுக்கு குடும்பத்துடன் செல்லுங்கள்.

இன்று உங்கள் வேலையில் பிஸியாக இருப்பீர்கள். பணி நிமித்தமாக பயணங்களை மேற்கொள்வீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். துணையுடனான உங்கள் பேச்சு இன்று பயனுள்ள பேச்சாக அமையும்.

சில ஆரம்பகட்ட போராட்டங்கள் மற்றும் தடைகளுக்கு பின் பணவரவு உண்டு. நீண்ட காலம் நிலுவையிலுள்ள பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் நன்றாக இருக்கும். என்றாலும் குளுமையான பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.

# அரிசி இறக்குமதி செய்ய பாதுகாப்பு குழு பரிந்துரை



நுகர்வோருக்கு தட்டுப்பாடின்றி அரிசியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உணவுக்கொள்கை மற்றும் பாதுகாப்பு குழு அரிசியை இறக்குமதி செய்ய பரிந்துரை செய்துள்ளது.

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் உணவுக்கொள்கை மற்றும் பாதுகாப்பு குழு நேற்று முன்தினம் கூடிய சந்தர்ப்பத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அறுவடை இடம்பெற்று வருகின்ற போதிலும் சந்தையில் அரிசியின் விலை அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருப்பதோடு சந்தையில் குறிப்பிட்ட சிலவகை அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி போதியளவு அரிசியை கையிருப்பில் வைத்திருக்கும் வகையில் அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவருவது குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் அதிக மழை பெய்ததால் இருதடவைகள் விளைச்சலுக்கு சேதமேற்பட்டு எதிர்பார்த்த அறுவடையில் கணிசமான அளவு குறைந்துள்ளதும் இங்கு குறிப்பிடப்பட்டது.

கால்நடை உணவுக்கு முறையற்ற விதத்தில் அரிசியைப் பயன்படுத்துவதே அரிசி தட்டுப்பாட்டுக்கு மற்றொரு முக்கிய காரணம் எனவும் கால்நடை உற்பத்தி தொழிலில் கால்நடை உணவுத்தேவைக்காக உடைத்த அரிசியை இறக்குமதி செய்வது மற்றும் மாற்று உணவுகளை பயன்படுத்துவது குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

அதற்கமைய உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தேவையான அளவு உடைந்த அரிசியை இறக்குமதி செய்ய விவசாய அமைச்சின் பணிப்பாளர் தலைமையிலான குழுவை அமைப்பதற்கும் உணவுப் பாதுகாப்பு குழு அனுமதி வழங்கியுள்ளது.